**THE LABOUR COURT, SALEM**
**C.P.No. 23 Of 2024**

**02.06.2025**

**PW1 – திரு. விஸ்வநாதன்**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை– (எதிர்மனுதாரர் தரப்பில்) –**

நான் 10.01.1982 ல் தொழில்நுட்ப பணியாளராக பணியில் சேர்ந்து 20.09.2020 ல் foreman ஆக பணிஓய்வு பெற்றேன். நான் தற்காலிக பணியாளராக பணியில்சேர்ந்து 10.01.1983 ல் பணிநிரந்தரம் செய்யப்பட்டேன் என்றால் சரிதான். நான் மனுவில் Dearness Allowance தொகையாக ரூ.21000/– மற்றும் சிறுதொகை கோரியுள்ளேன். எந்த வருடத்திய தொகை என்றும் எந்த ஊதிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கோரியுள்ளேன் என்றால் 3 வருடததிற்கான தொகை கோரியுள்ளேன் 2016 முதல் 2018 வரையா அல்லது 2017 முதல் 2019 வரையா என்று நியாபகம் இல்லை. ஊதிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் Dearness Allowance கணக்கிடப்படும் என்றால் சரிதான். என்னுடன் பணிபுரிந்த என்னடைய பணிநிலையில் இருந்த ஊழியர்கள் அனைவருக்கும் ஒரே விதமான Dearness Allowance தொகை கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டது என்றால் சரிதான். ஏற்கனவே 14% Dearness Allowance கொடுத்து வந்தார்கள் தற்போது 16 % உயர்த்தி 30% கொடுத்து வருகிறார்கள். நான் சென்ற வருடம் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெற்ற பென்சன் தொகை ரூ.22558/– நான் தற்போது பெற்று வரும் பென்சன் தொகை ரூ.30183/– நான் ERBS தொகை வாங்கிவிட்டேன் என்றால் சரிதான். நான் பணிஓய்வு பெறும்பொழுது 13 வது ஊதிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொகைகள் கொடுத்தார்கள். ஆனால் எனக்கு 14 வது ஊதிய ஒப்பந்தம் பொருந்தும். எனக்கு 14 வது ஊதிய ஒப்பந்தப்படிதான் பென்சன் தொகை கொடுத்துவருகிறார்கள் என்றால் சரிதான். EL Surrender தொகை 240 நாட்களுக்கானதை கொடுத்விட்டார்கள் என்றால் பழைய ஊதிய

ஒப்பந்தப்படி கொடுத்தார்கள் புதிய ஊதிய ஒப்பந்தப்படி கொடுக்கப்படவேண்டும். 20.09.2020 ல் நான் விருப்ப ஓய்வு பெற்றேன் என்றால் சரிதான். நான் விருப்ப ஓய்வு பெறும்பொழுது Lump sum தொகை கொடுக்கப்பட்டது என்றால் மொத்தாக கொடுத்தார்கள் ஆனால் குறைவாக கொடுத்தார்கள், எவ்வளவு மாதங்களுக்கான தொகை எவ்வளவு குறைவாக கொடுகக்ப்பட்டது என்று மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மனுவில் அவ்வாறு சொல்லவில்லை என்றும் பொதுவாக தொகை கோரியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் விருப்பு ஓய்வு பெற்றுவிட்டதால் 14 வது ஊதிய ஒப்பந்தம் எனக்கு பொருந்தாது என்றால் சரியல்ல. ஈட்டிய விடுப்பு 153 நாட்கள் எந்த மாதத்திற்கானது என குறிப்பிட்டு சொல்லாமல் பொதுவாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எந்த மாதம் என்று எனக்கு நியாபகம் இல்லை என்னுடைய பணிப்பதிவேட்டில் அந்த விவரங்கள் உள்ளது அதுபற்றி மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ERBS மற்றும் பிற தொகைகளுக்கு மனுவில் வட்டி கேட்டுள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் ERBS தொகைக்கு எனக்கு வட்டி வேண்டாம் வரவேண்டிய மற்ற தொகைகளுக்கு வட்டியுடன் கொடுத்தால் போதும். எனக்கு வரவேண்டிய தொகைகள் அனைத்தும் சரியாக கணக்கிட்டு கொடுத்துவிட்டார்கள் என்றும் தவறான கணக்கிட்டின் அடிப்படையில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பழைய ஊதிய ஒப்பந்த கணக்கிட்டின் படி தொகை கொடுத்துள்ளார்கள் எனக்கு புதிய ஒப்பந்தப்படி தொகை தரப்படவேண்டும். மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரனை – இல்லை.

(Sd/- Tmt.M.Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem